# மனதுக்குள் குட்டிபோடும் மயில் இறகுகள்.!



(எல்லாவற்றையும் தொட்டுச்செல்ல முயலும் ஒரு எளியதொடர்)

- ச.ச.முத்து

இறகுகள் *23:1*

## நிறைவேற்றப்படாமலேயே இருக்கும் திலீபனின் கோரிக்கைகள்

வரப்போகின்ற இன்னும் ஓரிரு தினங்களில் (15 செப்டெம்பர் 1987) மனித வரலாறு காணாத ஈகத்தை நிகழ்த்துவதற்காக திலீபன் நல்லூரின் வீதியில் தவம் இருக்க தொடங்கிய நாள் வரப்போகின்றது. தண்ணீரும் அருந்தாமல் இருக்கும் உண்ணாவிரதம் எத்தகைய வலிகளைத்தரும் என்பதை முற்றும் முழுதாக தெரிந்துகொண்டே திலீபன் அந்த மேடைக்கு வந்து அமர்ந்தவன். இதைப் போன்றதொரு பொழுது அது.

ஆயுதங்கள் தற்காலிகமாக மௌனமான காலம் அது. ஆயுதங்கள் இல்லாமலேயே சமராடவேண்டி இருந்தது. அதற்காகவே திலீபவேள்வி தொடங்கியது. தனித் தமிழீழம், சுயாட்சி, சமஸ்டி போன்ற எந்தவொரு ஆட்சி அதிகார கோரிக்கைகளும் இன்றி மிக இயல்பாக தமிழ்மக்களின் அன்றாட வாழ்வு மற்றும் பயமின்றிய நடமாட்டம் இவைகளே அன்றும் திலீபனின் கோரிக்கைகளாக இருந்தன.

**1. பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்ட அனைத்து தமிழ்க் கைதிகளும் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும்.**

**2. புனர்வாழ்வுத்திட்டம் என்ற பெயரில் தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்டமுறையில் நடைபெறும் சிங்கள குடியேற்றங்கள் நிறுத்தப்படவேண்டும்.**

**3. வடக்கு–கிழக்கு இடைக்கால அரசு அமையும் வரை இத்தகைய புனர்வாழ்வுத் திட்டங்கள் என்ற பெயரில் நடைபெறும் அனைத்தும் நிறுத்தப்படவேண்டும்.**

**4. வடக்கு–கிழக்கில் புதிதாக சிங்கள காவல் நிலையங்களும், இராணுவ முகாம்களும் அமைப்பது உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.**

**5. சிறீலங்காப் படையினரும் காவல்துறையினரும் முகாமிட்டிருக்கும் பாடசாலைகளில் இருந்து உடனடியாக விலகிக்கொள்வதுடன், சிறீலங்காப் படைகளால் தமிழ்க் கிராமங்களுக்கு அருகில் உள்ள சிங்கள கிராமங்களின் ஊர்காவல்படையினருக்கு வழங்கிய ஆயுதங்களை இந்தியா களையவேண்டும்.**

இவையே திலீபனின் கோரிக்கைகள்.

இந்தக் கோரிக்கைகளுக்காக ஒரு உன்னதமான இளைஞன் ஒரு சொட்டுத் தண்ணீரும் அருந்தாமல் போராடி இன்று இருபத்து மூன்று வருடங்களாகின்றன. இந்த இருபத்து மூன்று வருடங்களில் உலகம் எவ்வளவோ விடயங்களில் மிகமிக முன்னேறி வந்துவிட்டது. தகவல், தொழில்நுட்பம், வாழ்வியல், அறிவியல், ஆற்றல், நாகரீகம் என்று எல்லாவற்றிலும் இந்த இருபத்துமூன்று வருடங்களில் பெருத்த பாய்ச்சலும், முன்னகர்வும் கண்டு அடைந்துள்ளது.

ஆயினும் இந்த இருபத்துமூன்று வருடங்களாகியும் இன்னும், திலீபனின் அந்த ஐந்து கோரிக்கைகளும் அப்படியே தொடர்வது மானுடத்துக்கே அவலமானது. இன்றும் பாடசாலைகளில் இராணுவம், இன்றும் புதிது புதிதாக இராணுவ–பொலீஸ் முகாம்கள்.

இன்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுகள், தடுத்துவைப்புகள், இன்றும் புனர்வாழ்வு திட்டம் என்ற போர்வையிலும், மீளக்குடியேற்றம் என்ற போர்வைக்குள்ளாகவும் நடைபெறும் சிங்கள குடியேற்றங்கள்.

இப்படியாக இன்றும் திலீபன் நல்லூரில் உண்ணாவிரதத்தில் இறங்கிய காரணங்கள் அப்படியே தான் இருக்கின்றன.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்த இத்தகையவிடயங்களை உடனடியாக



நிறைவேற்றும்படி கேட்டுத்தான் திலீபன் தண்ணீரும் அருந்தாமல் தவம் இருந்தான். பஞ்சசீலமும், நான்கு வேதங்களும், தத்துவங்களும், அகிம்சையும் தங்களிடம் இருந்தே தோன்றிதாக கர்வம்கொண்டிருந்த பாரதத்தின் உச்சஅரசில் உட்கார்ந்து இருந்தவர்களுக்கு இதுதான் ‘அகிம்சையின் விஸ்வரூபம்’ என்று பாடம் சொன்னவன் எங்களின் திலீபன்.

திலீபன் வென்றான், தோற்றான் என்பது அல்ல முக்கியம். அவன் தன்காலத்தில் இவைகளை முன்னிறுத்தி போராடினான். அவன் மறைந்து இருபத்து மூன்று வருடங்களாகிய பொழுதிலும் இப்போதும், சில நாட்களுக்கு முன்னர் ஒரு தமிழ் மகன் இராணுவமயமான யாழ்நகருக்குள் நின்றுகொண்டு, இந்திய அதிகார வர்க்கத்தின் பிரதிநிதிக்கு முன்னால் ஒப்பந்தத்தில் சொன்னவற்றையே நிறைவேற்றாத இந்தியா என்று முகத்திலடித்தாற் போல சொல்லியிருப்பது வரலாற்றின் மிகவும் மறுக்கமுடியாத மீள்எழுகையே ஆகும்.

கோரிக்கைகளும், அபிலாசைகளும் நிறைவேற்றப்படும் வரைக்கும் ஏதோ புதிது புதிதான வடிவங்களில் மனிதம் எழும். ஒரு வழி அடைபட்டால், இன்னொரு பாதை திறபடும். பழையது புதியது என்று எதுவானாலும் எது சாத்தியமோ அதுவே போராட்ட முறையாகும்.

அதோ அங்கே, திலீபன் உயிர்துறந்த இடத்தில் இருந்து சில மீற்றர் துாரத்திலேயே பத்து நாட்களுக்கு முன்னர் சிற்றம்பலம் என்ற தமிழ்மகன் எல்லாத் தமிழர்களின் குரலாக ஓங்கி ஒலித்தானே அதுவும் திலீபனின் தொடர்ச்சிதான். நீண்ட துாரங்களை நடந்தே கடந்து கோரிக்கைகளை வைக்கிறார்களே எங்களின்

உறவுகள், அவர்களின் போராட்டமும் திலீபனின் தொடர்ச்சிதான். திலீபன் என்பது இடைவெளியின்றி என்றும் தொடரும் ஒரு போர் முறையே.

**கோரிக்கைகளும், அபிலாசைகளும் நிறைவேற்றப்படும் வரைக்கும் ஏதோ புதிது புதிதான வடிவங்களில் மனிதம் எழும். ஒரு வழி அடைபட்டால், இன்னொரு பாதை திறபடும். பழையது புதியது என்று எதுவானாலும் எது சாத்தியமோ அதுவே போராட்ட முறையாகும். அதோ அங்கே, திலீபன் உயிர்துறந்த இடத்தில் இருந்து சில மீற்றர் துாரத்திலேயே பத்து நாட்களுக்கு முன்னர் சிற்றம்பலம் என்ற தமிழ் மகன் எல்லாத் தமிழர்களின் குரலாக ஓங்கி ஒலித்தானே அதுவும் திலீபனின் தொடர்ச்சிதான்.**

திலீபனுக்காக ஒரு சிறுகவிதை:

## எப்போதும் போலவே...

**எப்போதும் போலவே இம்முறையும்
திலீபனின் நினைவுநாள் வருகின்றது.
எப்போதும் போலவே அவனை
நினைக்கும் போதினிலே நீரும் உணவுமின்றி
படுத்துக்கொண்டே போர்செய்த ஒரு
போராளியாக ஞாபகத்துள் உறைவான்.
இந்தமுறையும் அந்த நாட்களில்
நீர்அருந்தும் போதினிலும், உணவுண்ணும் பொழுதுகளிலும்
நீர்வற்றிப்போன அவனின் வெடித்துப் பெருத்த
உதடுகளும் கண்களுமே நெஞ்சில் அறையும்.
முன்பொருநாள் புழுதி எழும்பத் தேர் உருண்ட
வீதியில் தீ எழும்ப வேள்வி செய்த
திலீபனின் நாட்கள் சாம்பலேறிப் போகாது.
செப்டம்பர் என்றாலே அவன் நினைவுகளே
விரிந்து மனசுக்குள் சடைத்து நிற்கும்.
எப்போதும் போலவே இம்முறையும்
அவனின் கால்கள் நடந்தும் கடந்தும் போன
ஈழத்து மண்ணும்,
கலிபர் பூட்டிய வாகனத்தின் மீதிருந்து
அவன்பேசிய அரசடிப் பேச்சும்
துாரத்து எதிரொலியாக எங்கோ கேட்கும்.
எங்களின் வயல்வரப்புகளைக் கடந்தும்
கடற்கரை வெளிகளை ஊடறுத்தும்,
சிதைந்திருக்கும் எம் தாயககாற்றிலேறி
நிச்சயமாய் அவனின் வார்தைகள்
எங்கும் வந்தடையும்.!
‘மக்கள் புரட்சி வெடிக்கட்டும்
வானத்தில் இருந்து விடுதலையை பார்ப்பேன்’
எந்தவித ஒப்பனைகளுமற்ற இந்த
சத்தியவார்த்தைகளே இனிவரும் காலங்களில்
ஈழத்தமிழினத்தை நேரெடுக்கும் .**

(இன்னும் குட்டிபோடும்